## தமிழ்நாடு அனைவருக்கும் கல்வி இயக்கம்

**"அனைவரும் கற்போம்"** **"அனைவரும் உயர்வோம்"**

அனுப்புநர்
**திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப.,**
மாநிலத் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை 600 006.

பெறுநர்
மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்
அனைத்து மாவட்டங்கள்

**ந.க.எண். 1168/A3/MDO/SSA/2012 நாள் .08.2012**

**பொருள்** அனைவருக்கும் கல்வி இயக்கம் – கல்வி உரிமை இயக்கம் (Shiksha Ka Haq Abhiyan) – பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பேச்சு, கட்டுரை, கவிதை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்துதல் – சார்பு.

**பார்வை** அனைவருக்கும் கல்வி இயக்க மாநிலத் திட்ட இயக்குநரால் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்ட நடவடிக்கைகள் நாள் 11.05.2012.

* * * * *

2012–13ல் கல்வி ஆண்டில் கல்வி உரிமை இயக்கம் சார்ந்த ( Shiksha Ha haq Abhiyan) செயல்பாடுகளை திட்டமிடுவதற்கும் உரிய முறையில் செயல்படுத்துவதற்கும் 09.05.2012 அன்று அனைவருக்கும் கல்வி இயக்கம் மாநிலத் திட்ட இயக்கத்தில் மாநிலத் திட்ட இயக்குநரால் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் 2012–13ம் ஆண்டிற்கான கல்வி உரிமை இயக்கம் சார்ந்து அனைத்து செயல்பாடுகளும் திட்டமிடப்பட்டது. இச்செயல்பாடுளில் முக்கியமான ஒரு அம்சமாக பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பேச்சு, கட்டுரை, கவிதை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டது.

இதனடிப்படையில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகளும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கட்டுரை, பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகளும் மற்றும் 9 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கட்டுரை, கவிதை, பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகளும் நடத்தி பரிசுகள் அளிக்கப்படுதல் வேண்டும்.

பள்ளி அளவில் முதலிடம் பெறும் மாணவ / மாணவியர்களை வட்டார அளவிலும், வட்டார அளவில் முதலிடம் பெறும் மாணவ / மாணவியர்கைள மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு நேர்ந்தெடுத்தல் வேண்டும்.

பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு நவம்பர் 14 குழந்தைகள் தினத்தன்று மாவட்ட ஆட்சியர் மூலம் பரிசுகள் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பு

1. மாவட்டங்களில் இந்த சுற்றறிக்கை கிடைக்கப் பெற்ற உடனே அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் நகல் எடுத்து கொடுக்கப்பட வேண்டும்.
2. அனைத்த மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர்களுடன் கலந்தாலோசித்து பள்ளிகள், வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளை சிறப்பாக நடத்திட வழிவகை செய்திடல் வேண்டும்.
3. மாவட்டம் முழுவதும் போட்டிகள் ஒரே நாளில் துவங்கப்பட வேண்டும். மற்றும் போட்டிகள் அனைத்தும் நவம்பர் 14 குழந்தைகள் தினத்தன்று முன்னரே முடிக்கப்பட வேண்டும். குழந்தைகள் தினத்தன்றே பரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும்.
4. பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடக்கும் போட்டிகளை முறையாக ஆவணப்படுத்துதல் மற்றும் புகைப்படங்கள் (Photo) ஒரு சில இடங்களில் ( ஒளிபதிவும்) Video ( மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகள் மற்றும் பரிசு வழங்கும் நிகழ்வு ) செய்து மாநிலத் திட்ட இயக்குநருக்கு அனுப்புதல் வேண்டும்.
5. அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளில் மேற்கண்ட போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்க பள்ளி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தலாம்.
6. போட்டிகள் நடக்கும் பள்ளிகளில் சம்மந்தப்பட்ட ஆசிரிய பயிற்றுநர்கள் அப்போட்டிகளை நடத்தி முடிக்குவரை முறையாக கண்காணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
7. மாணவர்களின் படைப்புகளை பொது நிகழ்ச்சிகளில் ( exhibitions and Melas) பெற்றோர் மற்றும் பொது மக்கள் பார்வைக்கு வைக்க அனைத்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இதற்காக போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளை வென்ற குழந்தைகளின் படைப்புகளை (Poetry, Essay Writing, Oratory and Drawing Competitions) தொகுத்து சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
8. பள்ளி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் தொடங்கும் தேதியினை மாநிலத் திட்ட இயக்கத்திற்கு தெரிவிக்க அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் கீழ்கண்ட தலைப்புகளில் வகுப்புகளுக்கு ஏற்றவாறு ஒரு சில தலைப்புகளை வகுப்புகளுக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுத்து பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

**பேச்சுப்போட்டி**

1. எனது பள்ளி நேற்றும் – இன்றும்
2. குழந்தைத் தொழில் ஒழித்த கல்வி உரிமைச் சட்டம்
3. விழுதுகளாய் நிற்கும் ஆசிரியர்கள்

4. சுமையின்றி சுகமான கல்வி
5. தற்போதைய கல்வி நிலை
6. எனது பள்ளியில் சுகாதார மேம்பாடும் கல்வியும்
7. இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 ஆம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு
8. கல்வியில் அரசின் கடமையும் குழந்தைகளின் உரிமையும்
9. கற்போருக்கு எதிர்காலம்
10. பள்ளியில் கல்வி கற்க மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள்
11. கற்றவனே உலகின் முதலாளி
12. என் உரிமை
13. உழைப்பின் வேர்கள் கசப்பானவை
14. கல்வி சுமையில்லை சுகம்
15. Children rights and duties
16. இடைநிற்றல் தவிர்த்தல்
17. சமுதாயத்தில் கட்டாயக் கல்வியின் அவசியம்
18. கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு
19. நாளைய உலகம் நம் கையில்
20. புதிய சமுதாயம் படைத்திட வா
21. கல்விக்கு அரசு வழங்கும் நலத்திட்டங்கள்
22. சுகாதாரம் பேணுவோம்
23. கல்வியில் மாற்றங்கள்
24. இடைநின்ற மாணவனை இணைக்கும் கட்டாயக் கல்வி
25. நாம் விரும்பும் பள்ளி
26. பள்ளியின் அடிப்படை வசதிகள்
27. தற்போதைய சூழலில் கல்வி உரிமைச் சட்டத்தின் அவசியம்
28. தங்களைச் சார்ந்த சமுதாய மக்களிடம் குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள்
29. கல்வி உரிமைச் சட்டத்தில் SMCயின் பங்கு
30. இன்றைய சூழலில் கல்வி என்பது சுகமா சுமையா
31. பள்ளி செல்லா குழந்தைகள் இனி இல்லை

**கட்டுரைப்போட்டி**

1. பிள்ளையின் வருமானம் பெற்றோருக்கு அவமானம்
2. பாதியில் போன படிப்பு மீண்டும் மலர்ந்தது
3. அரசு பள்ளியில் பெற்றோர்
4. அரசுப் பள்ளியும் கல்வியும்
5. கல்வி ஒரு திசைகாட்டும் கருவி
6. கல்வி உரிமைச் சட்டத்தில் சமுதாயத்தின் பங்கு
7. கற்றிலின் அவசியம்
8. இலவச தொடக்க கல்வி இது கட்டாயம்
9. கல்வியால் வேள்வி செய்
10. தரமான இலவச கட்டாயக் கல்வி
11. இலவச கட்டாய கல்வி 2009–ன் சிறப்பு அம்சங்கள்
12. கல்வி எனது பிறப்புரிமை
13. கல்வி சார்ந்த அரசு நலத் திட்டங்கள்
14. இலவச கட்டாய கல்வி சட்டத்தின் சிறப்பு
15. மக்கள் மனதில் RTE சட்டம்
16. RTEயில் பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு
17. கல்வி கூடமே கண்திறக்கும் ஆலயம்
18. பள்ளியின் ஒட்டு மொத்த மேம்பாடு
19. மாணவர் சேர்க்கையில் VECன் பங்கு

20. கல்வி உரிமைச் சட்டத்தினை அமுல்படுத்துவதில் கிராமக் கல்விக்குழு மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவினரின் பங்கு
21. சமத்துவ கல்வி
22. சமுதாய மாற்றத்திற்கான ஆணிவேர் RTE
23. மாணவர் கல்வியில் பள்ளி மேலாண்மை குழுவின் பங்கு
24. நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கான 25 சதவீத ஒதுக்கீடு
25. கல்வி உரிமைச் சட்டம் 2009 சாராம்சம்

**கவிதைப் போட்டி**

1. தடைகளைத் தாண்டி வா
2. தாகம் தீர்த்த உரிமைச் சட்டம்
3. சிவந்த கைகள்
4. கல்வி எனது பிறப்புரிமை
5. சுதந்திரத்திற்கு முன் கல்வியின் நிலை சுதந்திரத்திற்கு பின் கல்வி நிலை
6. ஒளிமயமான எதிர்காலம்
7. களவு போகா செல்வம் கல்வி
8. கரும்பு தின்னக் கூலியா
9. வானம் வசப்படும்
10. இடைநிற்றல் எங்கே
11. இந்றையக் கல்வி
12. கற்றல் இனிது
13. விடியலை நோக்கி புதிய கல்வி
14. முப்பருவமும் முன்னேற்றம் ( Tri-semester)
15. எட்டிய கல்வி கனி
16. கண்மனியே வாராய் பள்ளிக்கூடம்
17. கல்வியில் கணினியின் விந்தை
18. வாய்ப்புகளின் திறவுகோல் கல்வி
19. பள்ளி செல்ல விரும்பு
20. கல்வி கலங்கரை விளக்கம்
21. பள்ளி ஒரு பூந்தோட்டம்
22. குழந்தைகளின் அடிப்படை உரிமைகள்
23. பயமில்லா தேர்வு
24. புதிய பாதை
25. இடைநின்ற மாணவனின் மடல்

**ஓவியப் போட்டி**

1. எனது பள்ளி ( எனது கற்பனையில்)
2. கல்லுடைத்த கையில் காகிதங்கள்
3. RTEயின் செயல்களை வண்ணம் தீட்டுதல்
4. பள்ளி மேலாண்மைக் குழு
5. கல்வியால் ஏற்படும் முன்னேற்றம்
6. RTEயின்படி அமைந்த பள்ளி
7. குழந்தைகளின் உரிமைகள் – தொடர்பான ஓவியங்கள்
8. தரமான வகுப்பறை
9. கல்வியால் ஒழியும் வறுமை
10. பள்ளிக்கு வாராயோ ( குழந்தைத் தொழிலாளர் பற்றி)
11. நீ விரும்பும் பள்ளிச் சூழல்
12. அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் வழங்கப்பட்ட திட்டங்களை ஓவியம் மூலம் வரைந்து காட்டுக
13. கல்வி அறிஞர் – வரைபடம்

14. குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சனைகள்
15. இனிதான வகுப்பறை
16. இலவச அரசு சலுகைகள்
17. ஒளிரும் இந்தியா

**செலவின விவரம்**

| S.No | Content | Break Up | Total Amount in Rs |
|---|---|---|---|
| 1 | **School Level**<br>**(i)** I to V Classes (Ist Prize - Rs 80, 2nd Prize - Rs 50, 3rd Prize - Rs 25)- totally 155 / competition,<br>**(ii)** VI to XII classes (Ist Prize - Rs 120, 2nd Prize - Rs 80, 3rd Prize - Rs 40)<br>(Totally Rs 240/ Competition). | 1. I to V - (2 x 155 x 28270 =8763700)<br>2. I to VIII –<br>2 x 155 x9499 =29,44,690<br>3 x 240 x 9499 =68,39,280<br>Total=97,83,970<br>3. VI to VIII –<br>(3 x 240 x 49 =35,280)<br>4. I to X & XII –<br>2 x155x151= 46,810<br>3 x240x151= 1,08,720<br>4 x240x151= 1,44,960<br>Total 3,00,490<br>5. VI to X & XII –<br>3 x 240x6566=47,27,520<br>4 x 240x6566=63,03,360<br>Total = 1,10,30,880 | 29914320 |
| 2 | **Block Level**<br>**(i)** I to V Classes (Ist Prize - Rs 200, 2nd Prize - Rs 100, 3rd Prize - Rs 50)- totally Rs 350 / competition,<br>**(ii)** VI to XII classes (Ist Prize - Rs 300, 2nd Prize - Rs 200, 3rd Prize - Rs 100) (Totally Rs 600/ Competition). | 1. I to V = (2 x 350 x 413)=289100<br>2. VI to VIII = (3x600 x413)=743400<br>3. IX to XII = (4 x 600 x 13)=991200 | 2023700 |
| 3 | **District Level**<br>**(i)** I to V Classes (Ist Prize - Rs 600, 2nd Prize - Rs 300, 3rd Prize - Rs 150)- totally Rs 1050 / competition,<br>**(ii)** VI to XII classes (Ist Prize - Rs 900, 2nd Prize - Rs 600, 3rd Prize - Rs 300) (Totally Rs 1800/ Competition). | 1. I to V = (2 x1050 x 30)= 63000<br>2. VI to VIII = (3 x 1800 x 30)=162000<br>3. IX to XII = (4 x 1800 x 30)=216000 | 441000 |
| | **Total** | | **32379020** |

மேற்கண்டவாறு செலவினம் மேற்கொள்ளவும், மேலும் செலவினத்தை அந்தந்த மாவட்டங்களின் 23.03 Community mobilization (for Media Activities) என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம் எனவும், அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போட்டிகள் தொடர்பான அறிக்கையினை கீழ்கண்ட படிவத்தில் உடனுக்குடன் அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

| S.No. | Name of the block | Classes | Competitions | No.of Participants | Name of the Winners ( I, II and III) |
|---|---|---|---|---|---|
| | | I to V | Oratory | | |
| | | | Drawing | | |
| | | VI to VIII | Essay Writing | | |
| | | | Oratory | | |
| | | | Drawing | | |
| | | IX to XII | Poetry, | | |
| | | | Essay Writing, | | |
| | | | Oratory | | |
| | | | Drawing | | |

இணைப்பு :

மாவட்ட வாரியான செலவின விவரம்

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

**நகல்**

1. முதன்மை செயலர்,
   பள்ளிக் கல்வித் துறை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குநர்,
   மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6
3. முதன்மைக் கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்
4. மாவட்ட கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்
5. மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் அனைத்து மாவட்டங்கள்